ශ්‍රී ලංකා අග්නිදිග විශ්වවිද්‍යාලය
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
**SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA**

**CENTRE FOR EXTERNAL DEGREES & PROFESSIONAL LEARNING (CEDPL)**

ලිපිනය / விலாசம் / Address: University Park, Oluvil # 32360
මගේ අංකය / எனது இலக்கம் / My Number
ඔබේ අංකය / உமது இலக்கம் / Your Number

27.07.2020

மதிப்பிற்குரிய ஐயா / அம்மணி

**<u>வெளிவாரிப்பட்டப் படிப்பிற்கான (பொது - கலைமாணி) மாணவர்களைப் பதிவு செய்தல்</u>**
**<u>Registration of External (General) Degree Programme (Bachelor of Arts) 2016 / 2017</u>**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2016 / 2017 ஆம் ஆண்டு வெளிவாரிப்பட்டப்படிப்பிற்கான (பொது - கலைமாணி) மாணவராகப் பதிவு செய்வதன் பொருட்டு தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

கலைமாணி (பொது) வெளிவாரிப்பட்டப்படிப்புக்கு ஆகக்குறைந்த தகைமைகள்:

*க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் (2017 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முந்திய பரீட்சை) ஆகக்குறைந்த சித்திகளுடன் பொதுச் சாதாரணப் பரீட்சையில் (General Common Test) குறைந்தபட்சம் 30% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுக்கு மேற்படாத வகையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

மேற்படி தகைமைகளை கொண்டிருக்கும் பட்சத்தில், நீங்கள் இப்பட்டப்படிப்புக்கு பதிவு செய்ய தகுதி பெற்றுள்ளீர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

முதலாம் வருடத்துக்கான கட்டணம் ரூபா. 40,000.00 ஆகும் (மீளளிக்கப்படாதது). இக்கட்டணமானது பதிவு, இரண்டு பருவங்களுக்கான பாடக்குறிப்புக்கள், கருத்தரங்கு மற்றும் பரீட்சை போன்றவற்றை உள்ளடக்கியது. இதை ஒரே தவணைக்கட்டணத்தில் செலுத்துதல் வேண்டும். அத்துடன் Pay In Voucher (PIV) மூலம் எந்தவொரு மக்கள் வங்கிக்கிளையிலும் செலுத்த முடியும்.

எனவே, நீங்கள் **15.08.2020** ஆம் திகதிக்கு முன்னர் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இணையதளத்தில் காணப்படும் Google Form Link **(https://forms.gle/hKmfvQS8DtAUE4n27)** ல் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதோடு, கீழ்க்குறிப்பிடப்படும் ஆவணங்களை **"Assistant Registrar, Centre for External Degrees and Professional Learning, South Eastern University of Sri Lanka, Oluvil"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் **21.08.2020** அன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்:

1. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் (இணைக்கப்பட்டுள்ளது)
2. முதலாம் வருட கட்டணமான ரூபா. 40,000.00 யும் வங்கியில் செலுத்திய பற்றுச் சீட்டு (PIV University copy)

உரிய திகதிக்குள் பதிவு செய்யத்தவறும் பட்சத்தில், இவ்வாய்ப்பு காத்திருக்கும் பட்டியலில் உள்ள (waiting list) விண்ணப்பதாரிக்கு வழங்கப்படும். அத்துடன் உங்களால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் போலியானவை எனக்காணும் பட்சத்திலும், பதிவு செய்வதற்கு உரிய தகைமையினைக் கொண்டிராத பட்சத்திலும் உங்களுடைய பதிவு எவ்வித அறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

உதவிப்பதிவாளர்
வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம்
பதிவாளருக்காக